**பிரித்தானியா அரசாங்க நிதி உதவியைப் பயன்படுத்தும் பிராந்திய பாலங்கள் செயற்திட்டம் II இன் (யூகே இரும்புருக்கு பாலங்கள் செயற்திட்டம்) - 2013**

---

பிரித்தானியா அரசாங்க நிதி உதவியைப் பயன்படுத்தும் பிராந்திய பாலங்கள் செயற்திட்டத்தின் (யூகே இரும்புருக்கு பாலங்கள் செயற்திட்டம்) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தேசிய நெடுஞ்சாலைகளில் உருக்குப் பாலங்களை நிருமாணிப்பதற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) ஹொங்கொங் மற்றும் சங்காய் வங்கியியல் கூட்டுத்தாபன வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிக்கும் (எச்எஸ்பீசீ) இடையில் 2013 யூன் 21 ஆம் திகதிய 53எம்/எவ்சீ/1448(201327 /எஸ்எல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது
ணி

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதி அளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்கள் முறையே முன்னாள் நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சான தற்போதைய நெடுஞ்சாலைகள், உயர்கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) என்பனவாகும். செயற்திட்டத்தின் நோக்கங்களாவன:

(அ) 104 கிராமிய பாலங்களின் வடிவமைப்பு, அளவிடுதல் மற்றும் வழங்கல்கள்

(ஆ) உள்நாட்டு சேவைகள் மற்றும் உள்நாட்டுப் பொருட்களிற்கான பங்களிப்பு

(இ) 04 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலத்திற்காக யூகெ தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சியினை பெற்றுக்கொடுத்தல் என்பவற்றின் மூலம்
வீதி உட்கட்டமைப்பை விரிவாக்கல் மற்றும் பலப்படுத்துதல் என்பனவாகும்.

பின்னர் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழுவினால் 104 பாலங்களிற்குப் பதிலாக 96 பாலங்களால் பதிலீடு செய்யப்பட்டது. கடன் உடன்படிக்கையின் படி, பாலங்களின் வழங்கல்கள் மற்றும் நிறுவுதலிற்கான ஒப்பந்தம் ரூபா 9,778.05 மில்லியனிற்குச் சமனான ஸ்ரேலிங் பவுன் 45 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2012 ஏப்ரல் 26 இல் ஐக்கிய இராச்சியத்திலுள்ள ஒரு ஒப்பந்தகாரருக்கு மொத்தத் தொகை அடிப்படையில் வழங்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 செப்தெம்பர் 19 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 செப்தெம்பர் 18 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனப் பட்டியல்படுத்தப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

---

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும்.

அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலிவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழான பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் சொல்லப்பட்ட அறவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் சொல்லப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 3. அபிப்பிரயாம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்களுக்கும் விளக்கங்களிற்கும் இணங்க இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் சொல்லப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 4,018 மில்லியனாகும். மீளாய்வாண்டிற்கான செலவினத்தின் பொழிப்பு பின்வரும் கூற்றில் காட்டப்படுகின்றது.

| விபரம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் |
|---|---|
| | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | 416,827 |
| பாலங்கள் | 441,324,586 |
| தொழில்நுட்ப உதவி | 15,998,688 |
| செயற்திட்ட முகாமைத்துவம் | 16,596,689 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 3,543,955,687 |
| | 4,018,292,477 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், பால உயர்கட்டமைப்புக்களின் வடிவமைப்பிற்காக வேலைத்தள பரிமாணளவு மற்றும் புவியியல் அளவைகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தகாரர் பொறுப்புடையாகவராகவுள்ளார் எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது 50 பாலங்களிற்காக விரவான திட்டமிடலை நடாத்தியிருந்ததுடன் அவற்றின் மீது ஏற்பட்ட கிரயம் நிர்ணயிக்கப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும், போர் ஹோல் (Bore Hole) புலனாய்விற்காக செயற்திட்டத்தால் செலவழித்த ரூபா 1,037,865 தொகை ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் செயற்திட்டத்தின் கிரயமாக கருதப்பட்டிருந்தது.

## 6. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, செயற்திட்டத்தின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிகளின் பயன்பாடு மற்றும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமை என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டிற்கான நிதிகளின் பயன்பாடு | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் |
|---|---|---|---|---|---|
| | யூ.கே.பவுன்ஸ் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| எச்எஸ்பீசீ | 45.0 | 9,778.05 | 1,500 | 3,533.06 | 3,533.06 |
| இலங்கை அரசாங்கம் | - | 2,500.00 | 200 | 118.19 | 118.19 |
| மொத்தம் | 45.0 | 12,278.05 | 1,700 | *3,651.25 | 3,651.25 |

* ஆண்டு இறுதியில் செலுத்த வேண்டியவை உள்ளடக்கப்பட்டிரமையால் அறிக்கையின் பந்தி 4 இல் காட்டப்பட்ட தொகையுடன் இந்த தொகை உடன்பட்டிருக்கவில்லை.

### 6.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டமானது காலரீதியாக செயற்திட்டத்தின் செயலாற்றலை மதிப்பாய்வு செய்யும் நோக்கில் விரிவான செயற்திட்ட திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்த வேலையின் ஆரம்ப நோக்கெல்லை பாலங்கள் வழங்குநரின் ஒத்துழைப்புடனும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடனும் இரண்டு சந்தர்ப்பங்களில் பின்னர் திருத்தப்பட்டிருந்தது. ஆகவே, 3,077.9 மீற்றர்கள் நேரியல் நீளத்துடன் 104 சீர்படுத்தக்கூடிய பாலங்கள் 2,999.5 மீற்றர்கள் நேரியல் நீளத்துடன் 96 பாலங்களிற்கு குறைக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலைகளின் ஆரம்ப நோக்கெல்லையில் அவ்வாறான அடிக்கடியான மாற்றங்களின் விளைவால், செயற்திட்ட கண்காணிப்பு பிரிவானது (பிஎம்யூ) மேலதிக இடம், நீளம், அகலம் மற்றும் பால நிர்மாணங்களின் முன்னுரிமைகள் என்பவற்றினை இனங்காண்பதற்கு தவறியிருந்ததுடன் அவற்றின் ஆரம்ப திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் கீழே தரப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| பாலங்களின் வகை | பிரேரிக்கப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடங்கப்பட்ட பால வேலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை |
| உறுதியான விரைவுப் பாலங்கள் (சீ200) | 39 | 5 |
| கச்சிதமான விரைவுப் பாலம் | 33 | 1 |
| தட்டைவடிவ பாலங்கள் | 2 | - |
| முக்கோணவடிவ பாலங்கள் | 21 | 5 |
| கலப்புருப் பாலங்கள் | 1 | 1 |
| | 96 | 12 |